Deposition of Witness (Chapter XXXIII Code of Criminal Procedure )
In the Court of Judicial Magistrate No.II Court, Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.No.330/2016 |
| Police Station | : Cuddalore O.T P.S |
| Deposition of witness for Prosecution | : L.W. 8 /P.W. 7 |
| Name | : Jayakumar |
| Father Name/Husband Name | : |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30.09.2020.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சங்கொலிக்குப்பத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.6 என்னுடைய நண்பர்தான். சுமார் 10 வருடங்களுக்கு முன்னதாக ஒருநாள் மதிய வேலை நானும் எனது நண்பரும் எங்கள் ஊரில் இருந்து பஸ்நிலையத்திற்கு செல்லும் வழியில் கடலூர் முதுநகர் காவல் நிலைய போலிசார் எங்கள் ஊருக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது அவர்கள் எங்கள் இருவரையும் அழைத்து எங்கள் பெயர் மற்றும் விலாசத்தை கேட்டார்கள். நாங்கள் எதற்காக கேட்கிறீர்கள் என்று கேட்டதற்கு அங்கு நடந்த விபத்து சம்மந்தமாக வந்திருந்தார்கள் என்றும் அதற்காக எங்களிடம் பெயர் மற்றும் விலாசம் கேட்கிறார்கள் என்று கூறினார்கள். மற்றபடி இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

***அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்ககோரி ஆவணங்களை பரிசீலனை செய்து அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-***

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் கடந்த 09.04.2010ம் தேதி பகல் 1.30 மணியளவில் நானும் எனது நண்பர் சதிஷ்குமாரும் எங்கள் ஊர் தெருவில் புலிகுத்தி பாலம் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபொழுது

கடலூர் முதுநகர் காவல் நிலைய போலிசார் முன்தினம் இரவு சுமார் 8.00 மணியளவில் கூலி வேலை முடித்துவிட்டு சைக்கிளில் வந்துகொண்டிருந்த வந்தபோது பூண்டியாங்குப்பத்தை சேர்ந்த முனியன் என்பவர் அவருக்கு பின்னால் வந்த டிராக்டர் PY.01-U.3444 பதிவு எண் கொண்ட வாகனம் மோதி விபத்துக்குள்ளான விவரமும் அதில் முனியன் என்பவர் இறந்துபோன சம்பவம் பற்றி எங்களுக்கு தெரியும் என்றும் அதுசம்மந்தாக மறுநாள் பகல் 1.30 மணியளவில் கடலூர் முதுநகர் காவல் நிலைய போலிசார் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் எங்கள் முன்னிலையில் தயார் செய்த பார்வை மகசரில் தான் சதிஷ்குமார் முதலாவதாகவும் நான் இரண்டாவதாகவும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுகொண்டதங்கிணங்க அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

-Sd-A.Suresh Babu
Judicial Magistrate No.II(FAC)
Cuddalore

Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure )
In the Court of Judicial Magistrate No.II Court, Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : C.C.No.330/2016 |
| Police Station | : Cuddalore O.T P.S |
| Deposition of witness for Prosecution | : L.W.7 /P.W.6 |
| Name | : Sadeeshkumar |
| Father Name/Husband Name | : Nagappan |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30.09.2020.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சங்கொலிக்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னை ஆயுதபடை பிரிவில் காவலராக பணிபுரிகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நானும் என்னுடைய நண்பருமான ஜெயகுமார் என்பவரும் சுமார் 10 வருடங்களுக்கு முன்னதாக ஒரு நாள் காலை மதிய வேலையில் எங்கள் ஊர் பஸ்நிலையத்தின் அருகே நாங்கள் சென்றபோது போலிசார் சிலபேர் அங்கு நின்றிருந்தார்கள் எங்கள் இருவரையும் கூப்பிட்டு எங்கள் பெயர் மற்றும் விலாசத்தை கேட்டார்கள். மேற்படி விவரத்தை அவர்கள் எதற்காக கேட்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுகொண்டதால் என்னுடைய விவரத்தை நான் அவர்களுக்கு அளித்தேன். மற்றபடி இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

***அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்ககோரி ஆவணங்களை பரிசீலனை செய்து அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-***

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் கடந்த

08.04.2010ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் கூலி வேலை முடித்துவிட்டு வந்த பூண்டியாங்குப்பத்தை சேர்ந்த முனியன் என்பவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபொழுது அவருக்கு பின்னால் வந்த டிராக்டர் PY.01-U.3444 பதிவு எண் கொண்ட வாகனம் மோதி விபத்துக்குள்ளான விவரமும் அதில் முனியன் என்பவர் இறந்துபோன சம்பவம் பற்றி எனக்கு தெரியும் என்றும் அதுசம்மந்தாக மறுநாள் பகல் 1.30 மணியளவில் கடலூர் முதுநகர் காவல் நிலைய போலிசார் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் எங்கள் முன்னிலையில் தயார் செய்த பார்வை மகசரில் தான் நான் முதலாவதாகவும் நண்பர் ஜெயக்குமார் இரண்டாவதாகவும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுகொண்டதங்கிணங்க அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பிறழ்சாட்சியாக மாறி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை</u>**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

-Sd-A.Suresh Babu
Judicial Magistrate No.II(FAC)
Cuddalore